# கொழு

# கல்தா

கோரநாதன்

எரிமலைப் பதிப்பகம்

# கொழுகல்தூ

★

ஆசிரியர் :

கோரநாதன்

★

— பிரசுரம் —

எரிமலைப் பதிப்பகம்

துறையூர். :: திருச்சி ஜில்லா.

நவம்பர் 1948. விலை 0—8—0

பழைய அமைப்பு முறைகள்—

இந்தக் கலைகள், கலா நிலயங்கள், புராணங்கள்,
  தொகுப்புகள், அவற்றை ஆக்கும் ஓயாப்பண்பு—
இவற்றை உயர்வாக மதிக்கவா வேண்டும்?
பொருளையும் வாணிபத்தையும் உயர்வாகக் கருத
  வேண்டுமா?

எவ்விதத் தடையும் எனக்கில்லை.

உயர்விடை உயர்வுகள் என்று கருதுவன் அவற்றை!

எனினும் அவற்றிலும் அதிஉயர்வென மதிப்பேன்
  பெண்ணும் ஆணும் பெற்றிடு மக்களை!

அரசியல் உயர்வென நினைத்தோம்.

அமைப்பு முறைகள் உயர்வென மதித்தோம்.

அவை உயர்வல, நலமில்லை என்றிடேன். அவை
  நன்று.

உங்களுடன் நானும் அவற்றைப் போற்றுவேன்.
ஆயினும், உங்களிடம், மண்மிசை உள்ள மக்கள்
  அனைவர் மீதும் அதிக அன்பு எனக்கு உண்டு!'

★

சிந்திக்கத் தெரிந்தவர்களின், சிந்திக்க விரும்புகிறவர்களின், சிந்தனைக்கு இந்நூலைச் சமர்ப்பிக்கிறேன்.

**கோரநாதன்.**

★

# 1. விழுங்குக மக்களை!

“ உலகத் துயரனைத்தும் காண்கின்றேன்.
தாழ்வுகள், அவமானம் அனைத்தையும் நான் பார்க்கிறேன்.
செயல்கள் சில செய்தபின்னர், மனம் புழுங்கி, வேதனையோடு விம்முகிற வாலிபர்களின் அழுகையை நான் கேட்கிறேன்.
பிள்ளைகளால் கவனிக்கப்படாமல், பெற்ற தாய் ஆதரவற்று, அநாதையாய், செத்துக்கொண்டிருப்பதை நான் காண்கிறேன்.
கணவனால் கைவிடப்பட்ட மனைவியை,
இளம்பெண்களை இழிவுபடுத்தும் தூர்த்தர்களை,
பொறாமைக் கொதிப்பை, காமலீலைகளை
—இவற்றை மறைக்க எழும் முயற்சிகளை
மண்ணிலே நான் காண்கிறேன்.

யுத்தத்தின், பஞ்சத்தின், வஞ்சகக் கொடுஞ் செயலின் வேலைகளைக் காண்கிறேன். வீரமரணம் பெறுவோரையும், கைதிகளையும் காண்கிறேன்.
கடல்மீது பஞ்சம். மற்றவர் வாழ்வதற்காக எவன் உயிர் துறப்பது என்று சீட்டுக்குலுக்கி விதியை நிர்ணயிக்கிற மாலுமிகளைக் காண்கிறேன்.
உழைப்போர், ஏழைகள், நீக்ரோவர் மீது,
இவர் போன்ற இன்னும் எவ்வளவோ பேர்கள்மீது
ஆணவம் மிக்கோர் அழுத்தும் கொடுமைகளை, இழிவுகளைக் காண்கிறேன்.

இவற்றை எல்லாம்—சிறுமைகள், துயர்கள் அனைத்தையும் — ஆர அமர்ந்து ஆழ்ந்து கவனிக்கிறேன்.
நான் காண்கிறேன்.... கேட்கிறேன் ... மோனத்தாழ்கிறேன்!"

—(வால்ட் விட்மன்)

மக்கள் செத்துக்கொண்டு வாழ்கிறார்கள்!

மண்ணிலே மனிதர் வாழ்வு 'செத்த பிழைப்பாகி' விட்டது. ஓடும் காலம் மனிதர் உயர்வுக்கு ஒளி காட்டுவதாயில்லை.

அறிவு வளர்ந்துவிட்டதாகப் பெருமை பேசப்படும் இன்று கூட, நடக்கும் பிராணியாக வாழ்ந்த மனிதன் ஊரும் ஜந்துவாய், நீரில் நீந்தும் ஜந்துவாய், வானிலே பறக்கும் ஜந்துவாய் மாற வகைகள் கண்டும் — அணு ஆராய்ச்சிகளில் வெற்றி பெற்று ஆக்கவும் அழிக்கவும் சக்திகள் ஏற்று — வளர்ச்சியுற்றுள்ள இன்று கூட, மனித வாழ்விலே அமைதி இல்லை. இன்பமில்லை.

யுத்தத்தை முடிக்க வந்த யுத்தம் என்று பறைசாற்றப் பட்ட உலக மகாயுத்தம் முடிந்த பின்னரும், யுத்தத்தின் சத்தம் ஓயவில்லை! மழை விட்டும் துவானம் விடவில்லை என்ற கணக்குத்தான்! தனி மனித உரிமைகளுக்காகப் போராடுகிறோம் என்று பாராள்வோர்கள் சமரிட்டு ஒரு மாதிரி சமாதானம் செய்து கொண்ட பின்னும், உலகத்தில் தனிமனிதனுக்கு கதி மோட்சம் பிறந்துவிடவில்லை.

காலப்போக்கிலே கஷ்டங்கள்தான் அதிகரித்து வருகின்றன என்பது நாட்டு மக்கள் அறிந்த—அறிகிற—அனுபவ உண்மை.

இதற்குள் அடுத்த யுத்தம் வந்துவிடுமோ என்ற அச்சமும் உலக வானிலே கார்மேகமாய் கவிந்து தொங்குகிறது.

உலகப் பரப்பை நாசமாக்கும் மகாயுத்தங்கள் போக, சதா அங்கு மிங்கும் யுத்தங்கள், கலகங்கள், குழப்பங்கள் நிகழ்ந்து கொண்டேயிருப்பது பத்திரிகைகள் காட்டி வரும் உண்மை.

அரசியலின் பெயரால், மதத்தின் பெயரால், சமுதாய அமைப்பு முறைகள், கட்டுப்பாடுகள், பண்டையக் கலாசாரங்கள் இன்னோரன்ன எண்ணற்ற பண்புகளின் பெயரால் மனிதரை மனிதர் வாட்டும் வழக்கம் வளர்ந்தே வருகிறது.

மனிதன் மனிதனாக வாழவில்லை. பல விஷயங்களைக் காணும்போது, மனிதனுக்கு மனிதனாக வாழவே தெரியவில்லை என்பது தெளிவாகிறது. மனிதன் நாசப்பாதையிலே புரளுகிறான் என்பது தெரிகிறது.

இதனால், மனிதன் உருப்படுவானா? உயிர்க்குலம் உருப்படுமா? ஒவ்வொரு மனிதனும் வாழ்க்கைத் தேவைகளைப் பெற்று அமைதியும் அன்பும் ஆனந்தமும் நிறைந்த வாழ்க்கை வாழ முடியுமா, முடியாதா என்பன போன்ற பிரச்னைகள் சிந்தனையில் உறுத்துகின்றன.

உலகச் சிந்தனையாளர்கள் அவரவர் மனப்பண்புக்குத் தக்கபடி விடை என்று எதையாவது சொல்லிவிடுகிறார்கள்.

அறிஞர் எச். ஜி. வெல்ஸ் மரணமடைவதற்கு முன்பு மனிதவர்க்கத்தின் பின்னேட்டம் பற்றிப் புலம்பி, மனித

மணம் செயல்முடிவை எய்திவிட்டது; அதன் சக்தி அவ்வளவு தான்; இனி மனித வர்க்கம் நசித்துப் போகும் என்று குறித்துவிட்டார்! இப்போது கூடச் சில அறிஞர்கள் மனித வர்க்கம் சர்வ நாசத்தை நோக்கி விரைந்து கொண்டிருக்கிறதென்று எழுதியும் பேசியும் வராமலில்லை!

உயிர்க்குலத்திற்கே எச்சரிப்பு போல் பேரறிஞர் பெர்னட்ஷா முன்பே எழுதியிருக்கிறார்— 'இயற்கை உயிர்ச் சக்தியை வைத்து பரிசோதனைகள் செய்து வருகிறது. இத்தகைய சோதனையின் பிந்திய விளைவுதான் மனித வர்க்கம். மனித வர்க்கம் சிருஷ்டி சக்திக்கு திருப்தி அளிக்காவிடில், தோல்வி என்று படுமானால், ஆரம்ப காலத்தில் உலகில் வாழ்ந்த ராட்சச மிருகங்களை அழித்துவிட்டது போல, மனித வர்க்கத்தையும் மண்ணோடு மண்ணாக்கிவிட இயற்கை தயங்காது.'

இயற்கையின் அழிவுக் கருவிகள் எவ்வளவோ! வெள்ளம், தீ, பூகம்பம், பஞ்சம், கொடுநோய் இப்படிப் பல பல.

மனித குலத்தை இயற்கையே வாழவிடாமல் அடிப்பதற்கு முன்னரே, மனிதர்களே மாய்த்துக் கொள்கிறார்கள். நல்வாழ்வு வாழ வகை எங்கிருக்கிறது? நல்லவர்கள் வாழ இடமெங்கிருக்கிறது?

எத்தர்களும், சுயநலமிகளும், குள்ளநரித்தனக் கள்ள நெஞ்சினரும், தாம் வாழப் பலரைக் காவு கொடுக்கத் தயங்காத கயவர்களும், கறுப்புச் சந்தைக் கழுகுகள், உழைப்பைச் சுரண்டும் உலுத்தர்கள், உரிமையை மறுக்கும் பண மூட்டைகள், பிறரை மனிதராகக் கருதாத அட்டைச் செயலினர் முதலிய சதிகாரக் கூட்டங்களும்,

உழையாமலே வாழ வெளிச்சம் போட்டு ஊரை ஏய்க்கும் பம்மாத்துக்காரர், ஏமாந்தோரை வஞ்சிக்க கடவுள், மதம், விதி, கர்மம் என்று கதையளக்கும் பெருச்சாளிகள் போன்ற நாசகாரக் கும்பல்களும் மிகுந்து விட்டனர்.

ஊருக்கு நல்லது செய்வோம்; உழைப்பின் பலனை எமக்கு நல்கிடு என்று பேசி, அரசியல், சீர்திருத்தம், கட்சி என்று லேபிள் ஒட்டிக்கொண்டு எத்து வியாபாரம் செய்வோரும் ஊரை, நாட்டை, உலகத்தை, உயிர்க்குலத்தை கெடுத்து வருகிறார்கள்.

இத்தகையவர்கள் மனித குலக் கறையான்கள்; உயிர்க்குலத்தின் புல்லுருவிகள்; உள்ளுக்குள்ளிருந்து—உடனிருந்தே—அரிக்கும்போது, சத்தை உறிஞ்சிக் கேடு செய்கிறபோது—மனிதவர்க்கம் உருப்படுவதேது?

மனிதரில் பெரும்பாலோர் இன்னும் வெறும் 'பிராணி' களாகத்தான் இருக்கிறார்கள். அவர்களுக்கு உண்பதுவும் ஊர்வம்பு பேசுவதும், பிள்ளை உற்பத்தி செய்வதும், கவலைகளில் உழல்வதும்தான் வாழ்க்கை என்று தோன்றுகிறது எழுதப் படிக்கத் தெரியாதவர்கள் எண்ணற்றோர். படிக்கத் தெரிந்தவர்கள் எல்லோரும் சிந்திப்பவர்கள் அல்லர்.

மனிதன் சிந்திக்கத் தெரிந்தவன் என்று சொல்லப்பட்டாலும்; மனித வர்க்கத்தில் சிந்திக்கத் தெரிந்தவர்கள் குறைவு. சிந்திப்பவர்கள் மிகக் குறைவு. சரியான முறையில் சிந்தனை புரிபவர்கள் மிகமிகக் குறைவு.

சுயநலமிகளும், புகழ் விரும்பிகளும், பதவிப் பித்தர்களும், பணத்தாசை கொண்டவர்களும் சிந்திக்கத் தெரியாதவர்களே—சரியாகச் சிந்திக்காதவர்களே—சொல் சாதுர்யத்

திஞல், பிரசார தந்திரத்தால் தங்கள் தங்கள் பக்கம் இழுக்க முயன்று, கட்சிகள் கண்டு, தங்களுக்குள்ளேயே வாதிட்டு வஞ்சனைகள் செய்து, சமுதாயத்தைக் கெடுக்கிறூர்கள். அவரவர் கொள்கைகளுக்கு ஏதாவது அழகான பெயரிட்டுக் கொள்வதில் குறைவில்லை. லட்சியங்கள், திட்டம், முற்போக்கு, மறுமலர்ச்சி என்று அடுக்குவதில் அளவில்லை. ஆனல் செயல் முறையிலே எல்லாம் மாறுபடுகின்றன.

மனித சமுதாயத்துக்கு வழிகாட்டத் துணிகிறவர்களின் போக்கே தவறுகள் நிறைந்ததாக இருக்கும்போது தலைவர்கள் காட்டும்பாதை எப்படி நல்லதாக அமையும்? சொல்லும் செயலும் மாறுபடுகிற சுயநலக்காரர்கள் நாட்டுக்கு நல்லது செய்ய முடியும்—செய்வார்கள்—என்று நம்பலாமா?

மனித சமுதாயம் உருப்பட வேண்டுமானல், மனிதன் ஒவ்வொருவனும் கல்வி அறிவுள்ளவனுக வேண்டும். ஒவ்வொருவனும் சிந்திக்கும் சக்தியை பண்படுத்தி வளர்க்க வேண்டும். தலைவர்களும் வழிகாட்டிகளும் அதற்கு ஆவனசெய்ய வேண்டும் முதலில்.

மக்கள் தங்கள் நிலையை தாங்களே உணர்ந்து, சிந்தித்து, தங்களுக்குச் சரியெனப்படுவதை அறிந்து, சமுதாயக் கூட்டுறவில் எல்லோருக்கும் நல்லதான திட்டங்கள் காணவேண்டும்.

★

# 2. ஒழியட்டும்!

"அகற்றுக யுத்தங்கள் பற்றிய விஷயங்களை.
யுத்தத்தையே ஒழித்து விடுங்கள்!
கறுகிச் செத்த, வதையுற்ற, பிணங்கள் என் பார்வையில் மறுபடியும் படவேண்டாம்!
குறையா நரகமும், ரத்த வெறியும், காட்டுப் புலிக்கும் நீள் நாக்கு பெற்ற ஓநாய்களுக்கும் தான் ஏற்றது. அறிவுள்ள மனிதருக்கல்ல.
யுத்தத்திற்கு பதிலாக தொழிலாக்கத்தை துரிதப் படுத்துங்கள்!

அகற்றுக கிழத்தனக் கதைப்புகளை!
அற்புத நவீனங்கள், அந்நிய அரசரின் லீலைகள் பற்றிய அளப்புகள், கூத்துகள் அனைத்தையும் அகற்றுக!
தேன் சொல் கூட்டி யாத்திடும் காதல் கவிதைகள்,
ஊடல் கூடல் .... சோம்பல் மிக்கோர் புரிந்திடும் லீலைக் கதைகள்—
யாவும் ஒழிக!

நடுநிசியில்,
சாமக் கலைஞர் இசைத்திடு ஒலிகளுக்கேற்ப,
நடனர் ஆடிடும் —
நலமற்ற இன்பங்கள்....ஒரு சிலரின் உற்சாக டம்பத்தனங்கள்....வெறிதரு வாசனை, கதகதப்பு, மது மயக்கு, கண்கவர் ஒளிவீச்சு இவை நிறைந்த—
விருந்துக் கேளிக்கைகளுக்கே ஏற்றவை அவை!"

—வால்ட் விட்மன்

மனித சமுதாயம் அமைதியுடன் வாழ்வதற்கு முதலில் ‘யுத்தம்’ தொலையவேண்டும்.

யுத்தங்கள் தொலையுமா ?

மனித வர்க்கம் இருக்கிறவரை யுத்தமும் இருந்தே தீரும்! சிருஷ்டியின் ஆரம்ப காலத்தில் பிறந்தது சமர். மனித நாகரிக வளர்ச்சியுடன் வேகமாக வளர்ந்து வந்திருக்கிறது யுத்தமும். சரித்திரமே இதற்குச் சான்று.

பலவித நாகரீகக் கலாசாரங்களும், பல்வேறு சாம்ராஜ்யங்களும் யுத்தத்திஞல் வளர்ந்து, யுத்தத்திலேயே வாழ்ந்து, யுத்தத்திஞலே மடிந்துள்ளன. இன்றைய வல்லரசுகளும் யுத்தங்களிடையே வாழ்கின்றன.

பேரரசுகள் சிற்றரசுகளை ஐக்கியப் படுத்திக்கொள்வதும், இவற்றுக்காக அப்பாவி மனிதர்கள் உயிரைக் கொடுப்பதும்....சிலரது அதிகார வெறிக்காக உலகெங்கும் உள்ள மக்கள் அவதியுறுவதும்....புதிய விஷயங்கள் அல்ல.

உழையாமலே மேனிலை உற்று வாழ விரும்புகிறவர்கள் தங்கள் ஆதிக்கத்தை நிலைநாட்ட முயன்று கொண்டிருப்பதஞல், அவர்களுக்குள்ளேயே போட்டி ஏற்படும் போது, சாதாரண வாழ்விலும் உழைத்துச் சாகிறவர்கள் யுத்தகாலத்தில் அதிகம் உழைக்கவும் உயிரைக் கொடுக்கவும் நேரிடுகிறது.

இதே ரீதியில் போகுமாஞல், உலகில் உழையாமலே ஆதிக்கம் செலுத்துவோருக்கும் உழைத்தும் வாழ்க்கை வசதிகளைப் பெற முடியாமல் உழல்கிற இனத்துக்கும் இறுதிப்போர் வரத்தான் செய்யும்.

இன்றைய வாழ்க்கை நியதி உழைப்பவர்களுக்கு உரிய பலன் கொடுப்பதாக அமையவில்லை. திறமைக்கும் உண்மைக்கும் நேர்மைக்கும் மதிப்பு இல்லை. இந்நிலை என்றும் நீடிக்காது; நீடிக்கக்கூடாது என்பதுதான் சிந்தனையாளர்களின் முடிவு.

உழைப்போரை வெகுகாலம் ஏமாற்றிக் கொண்டிருக்க முடியாது. 'கட்டுண்டோம்; காத்திருப்போம்; காலம் மாறும்' என்று ஆகாயத்தைப் பார்த்துக் கொண்டிருப்பவர்கள் கூட, வாழ்க்கை அனல் அடிவயிற்றைத் தீய்க்கும்போது, உடலைச் சுடுகிறபோது, உள்ளத்தைக் கறுக்குகிறபோது காலம் தானுக மாருவிடினும், காலத்தை மாற்ற வேண்டியதுதான்!' என்று துணியும் தெம்பு பெற்றுவிடுவார்கள். 'மாறு; அல்லது மாண்டு ஒழிவோம்' என்று துணிந்து உரிமைப்போரிட உலக மக்கள் முன் வந்து வெற்றிகண்டு, புது உலகம் அமைக்கும் போது யுத்தத்திற்கு முற்றுப்புள்ளி விழலாம். ஆனுல் அப்பொழுது கூட யுத்தத்திற்கு சமாதி கட்டப்படும் என்பது சந்தேகத்துக்கிடமான பிரச்னை தான்!

இன்று, யுத்தங்கள் நாகரிக உலகத்தின் சாபக்கேடு; மனித வர்க்கத்தின் இழுக்கு, என்றெல்லாம் கருதப்படினும் யுத்தத்தின் கோரப்பசியைத் திருப்திப்படுத்தும் துணைகளாக புதிய புதிய கருவிகளேயும் விஷச் சக்திகளேயும் ஆக்கிக்கொண்டு தானிருக்கிறுர்கள். தற்காப்பிற்காக என்று தயாரிக்கப்படும் போர்ச்சாதனங்கள், நாளாவட்டத்திலே தங்கள் உற்பத்திப் பெருக்குகளே விற்பனே செய்வதற்கு ஏற்ற நிரந்தரச் சந்தைகளேப் பல தேசங்களில் நிர்மாணிப்பதற்காக நாடு பிடிக்கவும், போட்டிக்கு வருகிறவர்களே

எதிர்க்கவும் இப்படிப் பல காரணங்களுக்கும் பயன் படுத்தப் படுகின்றன. ஆகவே, யுத்தம் முதலாளி வர்க்கத்தின் பாதுகாப்பு; ஏதேச்சாதிகாரிகளின் பலப் பரிசோதனை; மண்வெறி பிடித்த மமதையாளர்களின் சிருஷ்டி என்பது தெளிவாகும்.

ஒரு யுத்தம் முடிந்து பொருளாதார நிலை பாதகமடைகிற போது, மீண்டும் பொருளாதார தகிடுதத்தங்கள் செய்வதற்காக பணமூட்டைகள் மறுபடியும் யுத்தம் உண்டாக்கும் கருமத்தில் கண்ணுகயிருப்பது வியப்பல்ல. இதனல் யுத்தபீதி தொலைய உலக மக்கள் அனைவரும் பொருளாதார சமத்துவம் பெறவேண்டும் என்கிற சிந்தனையாளர்களின் தீர்ப்பு ஒரு வகையில் சரியானது தான் என்பது யோசிப்பவர்களுக்குப் புரியும்.

யுத்தத்திற்கு சமுதாயத்திலே நிலவுகிற பொருளாதார பேதம் முக்கிய காரணங்களில் ஒன்றே தவிர, அதுவே முழுக்காரணமாகி விடாது. மக்களின் மனப்பண்பும், வாழ்க்கை முறையும், கலைத்திறங்களும் மாற்றி யமைக்கப் படவேண்டும். மனித வாழ்விலே புதுமலர்ச்சி தேவை.

மனிதர்கள் தங்கள் வாழ்வில், தங்கள் சூழ்நிலையில் நிலவுகிற தன்மைகளையும் தவறுகளையும் உணர்ந்து, குணங்களைப்போற்றி குறைகளை அறுக்கும் சக்தி பெறுவதற்கு ஏற்ற வகையில் அறிவு வளர்ச்சி பெறவேண்டும். அதற்கு வகை செய்வதுதான் தலைவர்களின், அரசியல் கட்சிகளின், சமூக சீர்திருத்த வாதிகளின், இலக்கியக்காரர்களின், கலைஞர்களின் கடமையாகும்.

இன்றைய நிலை என்ன?

அரசியல் அரங்கத்திலே பதவி மோகத்தையும், பதவியைப் பாதுகாத்துக்கொள்வதற்காகச் செய்யப்படும் சூழ்ச்சியையும், போட்டியையும், மேலேறியவர்களைக் கவிழ்க்கச் செய்யும் சதிகளையும், வசைமாரிகளையுமே காண்கிறோம்.

பொதுவாக ஒவ்வொரு துறையிலும் அப்படித்தான். பணம் மிகுந்தவர்கள் செல்வாக்கு பெற்று விடுகிறார்கள். செல்வாக்கு மிக்கவர்கள் தங்களுக்குப் புகழ்பாடித் தலையாட்டுகிற பஜனைக் கூட்டத்தையே வளர்க்க விரும்புகிறார்கள். தங்களுக்கு மாறுபட்ட கருத்துடையவர்களைக் கீழே தள்ளி அஸ்தமனமாகும்படி செய்வதற்கு வேண்டியவற்றை நிறைவேற்றத் தயங்குவதில்லை. திறமையிருந்தும் ஏழ்மையால் வாடுகிறவர்களை தங்களுக்குப் பக்க பலமாக விலைக்கு வாங்கிவிட முடிகிறது. இவர்களது திறமையும் உழைப்பும் முட்டாள் தனத்துக்கு வக்காலத்து வாங்கிப் பேசவே பயன்படுத்தப்படுகிறது. நாட்டுமக்களின் நலத்திற்காக உபயோகமாவதில்லை.

இன்றையப் பெரும்பாலான கட்சிகள், அறிஞர்கள், திறமையாளர்கள் எல்லோரும், உழைப்பவர்களைப் போலவே, வஞ்சகத்தால் சமுதாயத்தின் மேல்படியில் உள்ளவர்களது ஆக்கினைக்குக் கட்டுப்பட்டு உழைக்க வேண்டிய கூலிகளாகத்தான் திகழ்கிறார்கள். அவர்களது பொறுப்புக்குப் பெரிய பெரிய பெயர்கள் சூட்டப்பட்டிருக்கலாம். உண்மையில் அவர்கள் சுதந்திரமற்ற — பிறரது நலத்துக்குத் தங்கள் திறமையை, உழைப்பை, காலத்தை அடகு வைத்துவிட்ட—கூலிகள்தான். அவர்களுக்கு தொழிலாளியைவிடக் 'கூலி' அதிகம் கிடைக்கலாம். அவ்வளவுதான். மனித சமுதாயத்திலே உண்மை

யான வளர்ச்சி ஏற்பட வேண்டுமானல், இவர்கள் ஒரு சிலரது நன்மைக்காக உழைக்கிற பண்பை விட்டொழிக்க வேண்டும். அடிமைப் புத்திக்கு கல்தாக் கொடுத்தாக வேண்டும்.

துறைதோறும் வேரூன்றி, அந்தத் துறைகளையும், அவற்றின் மூலம் மக்களின் மனோபாவத்தையும், அதனுல் மனித குல வளர்ச்சியையும் கெடுக்கிற காளான்களுக்கும் புல்லுருவிகளுக்கும் கல்தா கொடுத்தாக வேண்டும்—மனித சமுதாயம் மேனிலை அடையவேண்டுமானுல்.

'புதியதோர் உலகம் செய்வோம்; கெட்ட போரிடும் உலகத்தை வேருடன் சாய்ப்போம்' என்று சொல்லிச் சொல்லி காலம் போக்குவதால் பயனில்லை. வாழ்விலே புதுமை காண, பழமைக்கும் பழமை விரும்பிகளுக்கும், கிழடு தட்டியவர்களுக்கும் சீட்டுக்கொடுத்தாகவேண்டும்.

அதற்கு இன்னும் காலம் வரவில்லை என்று காத்திருந்தால், காலம் சுவடு விழுந்த பாதையில் மந்த கதியிலே உருண்டு கொண்டிருக்கும்.

★

"ஆர்த்திடு முரசு! ஊதுக சங்கு!
சாளரத்தூடே, கதவுகளிடையே
வெள்ளம் போல் பாய்க ஒலியே!
புனித ஆலயம் புகுந்து கும்பலைக் கலைக்க....
மாணவர் கற்றிடும் பள்ளிகளிடையே ஆர்த்திடு!
ஊதி முழங்கிடு!
மணமகன் எனினும் விட்டிட வேண்டா.

இன்பம் நுகர இதுவல சமயம்!
நிலம் உழுது, அறுவடைகாண
உழுவர்க்கும் அமைதி யில்லையாம்!
அத்தனை வேகமாய், கடுமையாய்
உறுமிடு, முழங்கிடு நீ—முரசே!
களிப்புடன் முழங்குக சங்கே!

ஆர்த்திடு முரசே! அரற்றுக சங்கம்!
தாமதம் வேண்டாம். ஆர்வக் கூவல்
பெற்றிட நிற்கவும் வேண்டாம்.
கோழையர் தம்மை கவனிப்பதேனோ?
அழுவார், கெஞ்சுவார் எவரையும்
மதித்திடல் வேண்டுமோ?
இளைஞரைக் கெஞ்சிடும் கிழவரை
ஓரத்தில் ஒதுக்குக! கவனிப்ப தேனோ?
மதலையர் தம் பிஞ்சுக் குரலோ
அன்னையர் கெஞ்சும் ஒலியோ
நின் செவியில் விழுந்திட வேண்டா!
வீர முரசே! ஆர்த்திடு, ஆர்த்திடு!
வெண்சங்கே! வீறுடன் முழங்குக நீயே!"

—வால்ட் விட்மன்

★

# 3. நாட்டைக் கெடுப்பவை

“ஆயிரங் காலமாய் ஆடி வரும்
பிசாசுத் தனங்கள் பற்பலவும்
பேய்வாய் காட்டிச் சீறுது பார்
முண்டி முரண்டிப் பின் வருகுது பார்!”

—விட்மன்

உலக நிலையே பொதுவாக இழிதகைமைகள் மிஞ்சியதாய் காணப்படுகிறது. என்றாலும் சில நாடுகளில் மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்ந்துவிட்டது. இன்னும் பல முயற்சிகள் செய்யப்படுகின்றன, வாழ்க்கை வசதிகளை வளப்படுத்திக் கொள்வதற்காக.

ஆனால், இந்தியாவின் நிலை மகாமட்டமாகிக்கொண்டு வருகிறது. தமிழகத்தின் நிலைமையோ மிக மிக மோசமாகி வருகிறது.

கீழ்திசையின் ஜோதி என்று இந்தியாவைப் பற்றி பெருமை பேசுவதில் பயனில்லை. இன்றைய நாட்டு நிலைமை நல்வாழ்வுக்கு வழிகாட்டுவதாயில்லை. எதிர்காலம் பற்றி எண்ணினால் மகிழ்வு ஏற்படுவதாயில்லை.

தமிழ் நாட்டின் விஷயமும் அதற்கு மேலாகத் தான் இருக்கிறது. கடல் கடந்து உயர் கலாசாரத்தை விதைத்தவர்கள் தமிழர்; பிற நாட்டினர் காடுகளில் மாடோட்டித் திரிந்த காலத்தில் கூட, தமிழ் மக்கள் நகரமைப்புகளை நன்கு வகுத்து நாகரீகம் வளர்த்து வந்தார்கள்; இமயத்திலே கொடி நாட்டினார்கள் என்பதெல்லாம் சரிதான். சரித்திரம் பொய் சொல்லவில்லை. ஆனால், பழம் பெருமை

பேசிப் பேசி பொழுதோட்டுவதால் என்ன பயன்? இன்றைய நிலை என்ன?

தற்கால நிலை தமிழருக்குப் பெருமை தருவதாயில்லை. தமிழரின் வாழ்க்கைத் தரமும், தமிழரின் பண்பாடும் மிகவும் தாழ்ந்து கிடக்கின்றன. நாட்டிலே செழிப்பில்லை. மக்கள் முகத்திலே மகிழ்ச்சி இல்லை. அவர்கள் உள்ளத்தில் நம்பிக்கை இல்லை. உடலிலே தெம்பு இல்லை.

ஆனால், மக்கள் மனதில் அறியாமை மண்டிக்கிடக்கிறது. சமுதாயத்திலே மடத்தனங்கள் வேரூன்றிக் காடாக வளர்ந்து கிடக்கின்றன. நாட்டில், சகல துறைகளிலும், ஒளியில்லை!

ஏன்? முக்கிய காரணம் அறியாமைதான்.

நாட்டினரில் எண்ணற்றோர் கல்வியறிவு இல்லாதவர்கள். கல்வி கற்கும் ஆசை இருக்கிற சிலருக்கு வசதி கிடையாது. கல்வி கற்றவர்களில் பெரும்பாலர் கூட, படித்தும் பயனற்ற தன்மை உடையவர்களாகத் தான் உள்ளனர். காரணம், கற்றுக் கொடுக்கப்படும் கல்வி முறையிலே உள்ள கோளாறுதான்.

கல்வித் திட்டம் காலத்துக்கும், வளர்ந்துவரும் அறிவு ஆராய்ச்சிகளுக்கும் ஏற்ப அமையவில்லை.

விஞ்ஞானத்தையும், பூகோள சாஸ்திரங்களையும் கற்றுக் கொடுக்க முயல்கிறபோதே முட்டாள் தனத்தையும் குருட்டுத் தன்மான நம்பிக்கைகளையும் வளர்க்க உதவும் பாடங்களும் வலுக்கட்டாயமாக போதிக்கப்படுகின்றன.

சூரியன், சந்திரன், கோளங்கள், வான மண்டல ஆராய்ச்சிகள் பற்றிப் படிக்கிற பையன்கள், சூரிய பகவான், அவன் மனைவி சாயா தேவி....சந்திரன் வளர்வதும் தேய்வதும் பெண்ணால் விளைந்த சாபத்தினாலே....வானத்திலே கடவுள் இருக்கிறார்; தேவர்கள் இருக்கிறார்கள்; தேவிகள் அரம்பை ஊர்வசிகள் நடனமாடிக் களிப்பூட்டும் ராஜ தர்பார்களும், குறையா இன்பம் உடைய சொர்க்கங்களும் உள்ளன என்றெல்லாம் நம்பவேண்டியதாகிறது!

பையன்களைச் சொல்லுவானேன்! சூரிய கிரகணம், சந்திர கிரகணம் எவ்விதம் ஏற்படுகிறது என்று விளக்கிச் சொல்லி, படம் போட்டுக் காட்டுகிற வாத்தியாரய்யாக்கள்கூட, கிரகண தினத்தன்று ராகு, கேது என்கிற பாம்புகளில் ஒன்று சூரியனை (அல்லது சந்திரனை) விழுங்குவதால் கிரகணம் விளைகிறது என்று நம்பி கடற்கரையிலோ, நதியோரத்திலோ, எங்கோ 'தர்ப்பணம்' பண்ணக்காத்திருக்கிறார்களே. அறிஞர்கள், பட்டம் பெற்றவர்கள், பத்திரிகாசிரியர்கள், ஆளவந்தார்கள் கூட இத்தகைய முட்டாள் தன எண்ணங்களில் நம்பிக்கைகொண்டு, பட்டினி கிடந்து, கிரகணம் விட்டதும் என்ன எழவுகளெல்லாமோ செய்து தீர்ப்பதில் முனைகிறார்களே — அதை என்ன சொல்ல! 'நம்ம மந்திரிகள்' நாடாள வந்த பிறகு கிரகணங்கள் அதிக முக்கியத்துவமும் புனிதமும் பெற்று, பொது விடு முறை நாட்களாக சர்க்கார் பட்டியலில் பதிவும் பெற்று விடுகின்றன.

நாட்டிலே—படித்தவர் படியாதவர் என்கிற பேதாபேதமற்று—நிகழ்கிற முட்டாள் தனங்கள் எவ்வளவோ. அவற்றில் இது ஒரு சிறு உதாரணம். இத்தகைய அறியாமைக்கு கல்தா கொடுக்கப்பட வேண்டும்—மக்களின் நிலை உயரவேண்டுமானால்.

இந்த விதமான மடத்தனங்களை வளர்க்கிற கல்வி முறையை மாற்றி யமைப்பது மட்டும் போதாது. மக்களை சிந்திக்கத் தூண்டுதல் அவசியம். அதற்கு நாட்டில் கவிந்துள்ள அறியாமை அந்தகாரத்தை அகற்றவேண்டும். அறிவொளி எங்கும் பரவ, எல்லோருக்கும் கல்வி கற்றுத்தர வசதிகள் செய்தாகவேண்டும். இன்று கல்வி யறிவற்றவர்கள் மிகுந்த நாடு நம் தேசத்தைப் போல் வேறு எதுவுமில்லை.

அறிவு பரவாததால், சிந்தனைவளர இடமில்லாததனால், எத்தர்கள் நன்றாக வாழமுடிகிறது இங்கு. எத்துவேலைகளுக்கு கல்தாக்கொடுக்க வேண்டுமானால், மக்கள் சிந்திக்கும் திறமை உடையவர்களாதல் அவசியம்.

மக்களின் அறியாமையை வளர்க்க விரும்புகிறவர்கள் மதத்தின் பெயரையும், கடவுளின் பெயரையும் நன்கு பயன்படுத்திக் கொள்கிறார்கள். சுயநலமிகள் மதம், கடவுள், விதி என்று பூச்சாண்டி காட்டிக் காட்டி மற்றவர்களை மடையர்களாக்கி வந்திருக்கிறார்கள். நரகம், மறுபிறப்பில் கொடுந்தண்டனை, கர்மம் என்று பயங்காட்டி தங்கள் காரியத்தைச் சாதித்து வந்திருக்கிறார்கள். சாதித்து வருகிறார்கள்.

பகுத்தறிவு இயக்கத்தினர் நாட்டிலே சிந்தனை உண்மைகளைப் பரப்பி, எத்தர்களின், சுயநலக்காரரின் குள்ளநரித்தனங்களை அம்பலப்படுத்த ஆரம்பித்ததிலிருந்து, தமிழ்நாடு விழிப்புறத் தொடங்கியிருக்கிறது. எனினும் மயக்கம் இன்னும் தீரவில்லை. நாட்டு மக்கள் எல்லோரும் உண்மையை உணர முயல வேண்டும்.

நாடாள வருவோரும், நாட்டுக்கு வழிகாட்ட விரும்புகிறவர்களும் மக்களின் நலத்தையே முக்கியமாகக் கருதிக் காரியங்கள் புரிய வேண்டும். ஆனால், இன்றோ! சந்தர்ப்ப வசத்தினால் பணக்காரர்களாகவும், பெரிய மனிதர்களாகவும் வாழ வசதி பெற்று விட்டவர்களுக்குத் துணைபுரியவே இவர்களது செயல்கள் பயன்படுகின்றன. இவர்களது நன்மையை உணர்ந்து கொண்டு மற்றவர்கள் நாட்டு நலம் கெடுக்கும் நச்சரவுகளாக வாழும் தங்கள் போக்கை மாற்றிக் கொள்ள விரும்பவில்லை.

'கறுப்பு மார்க்கட் கயவர்களை கழுவில் ஏற்றுவோம், பதவிக்கு வந்ததும்' என்று கர்ஜித்த தலைவர்கள் கறுப்புச் சந்தைக் கழுகுகளை விசாரணைக்குக் கூட கொண்டுவரவில்லை; அக்கயவர்களின் சுயரூபத்தை அம்பலப்படுத்தும் முயற்சிகளுக்கு அடிகோலியதாகக் கூடத் தெரியவில்லை.

சுயநல வெறிபிடித்த கயவர்களின் லீலைகளால், நாட்டிலே பஞ்சமும் பசியும் பயமுறுத்திக் கொண்டே வாழ்கின்றன.

பஞ்சமும் பசியும் வியாதிகளும் மலிந்திருப்பதற்கு வேறு முக்கிய காரணங்களும் உண்டு. மக்களின் அறியாமையும், சரியாக வாழ வசதியின்மையும் போக, மக்களின் சோம்பேறித்தனமும் முதன்மையானது இதற்கு.

நம் நாடு விவசாயத்தை நம்பியிருப்பது. விவசாயம் என்பது சோம்பல் பிழைப்பு! அதிலும், பருவகாலங்கள் பொய்த்துப் போகின்றன பல வருஷங்களாக. மண் வளம் குன்றிவிட்டது. இவற்றால் பூமியிலே நல்ல விளைச்சல் இல்லை.

உணவு உற்பத்தி பெருக வேண்டும். உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என்று பேசியும் எழுதியும் வந்தும் பயனில்லை. பஞ்சநிலையே நீடிக்கிறது. இதனால், விவசாயத்தை மேற்கொண்டவர்களும், நிலமுடைய குட்டி முதலாளிகளும் முழுச் சோம்பேரிகளாகி வருகிறார்கள்.

பிறதுறைகளில் உற்பத்திப் பெருக்கம் இல்லையென்றாலும், நாட்டிலே பிள்ளை உற்பத்தி அதிகரித்தே வருகிறது. மேல்நாடுகளிலே ஜனத்தொகை வளர்ச்சியை கட்டுப்படுத்துவதற்கு அவசியமான ஆலோசனைகள் பிரசாரம் செய்யப்படுகின்றன. பிள்ளை உற்பத்தியைக் குறைப்பது எவ்வளவு அத்தியாவசியமானது என்று அறிவுக்குப் பொருத்தமான காரணங்களோடு விளக்கி, மாற்றுகளும் காட்டப்படுகின்றன. நாட்டிலே உணவு உற்பத்தியும், தொழிற்பொருள் உற்பத்திகளும் வளர முடியாமல் போனாலும், இருப்பவற்றை வைத்து நிலைமையைச் சரிக்கட்டிக்கொள்ள இம்முறை நன்கு உதவுகிறது.

நம் நாட்டிலும் இம்முறை அனுஷ்டானத்துக்கு வர வேண்டும். அதற்குத் தேவையான பிரசாரங்கள் வளர வேண்டும். மதம், பாவ புண்ணியம் இவற்றின் பெயரால் எழுப்பப்படுகிற போலிச் சாக்குகளின் பொய்மையை எல்லோரும் புரிந்து கொள்ளக்கூடிய அளவுக்கு அறிவு விசாலமாதல் வேண்டும்.

நாட்டில் நிலவுகிற வறுமைக்கும், மனித சமுதாயத்தின் சீர்குலைவு, குணக்கேடுகளுக்கும் அளவுக்கதிகமான பிள்ளை உற்பத்தி முக்கியகாரணம். பிள்ளைகளைப் பெற்று விடுகிறார்கள். நல்ல முறையில் வளர்க்க முடிவதில்லை.

வளர்க்க வசதி இல்லை. பெற்றோர்களின் வசதியின்மையும், அறியாமையும் சேர்ந்து பிள்ளைகளின் வாழ்வைப் பாழாக்கி விடுகின்றன. இதனால் சமுதாயத்திலே மூர்க்கர்களும் முட்டாள்களும், வெறியர்களும் வீணர்களும், சோமாறிகளும் சோம்பேறிகளும் பெருத்து விடுகிறார்கள். பிள்ளைகளையும் பெண்களையும் பெற்றவர்கள் அவர்களுக்குக் கல்யாணம் செய்து வைக்கத் துடிக்கிறார்களே தவிர மக்களின் வருங்காலப் பொறுப்புகளைப் பற்றி கவலைப்படுவதே இல்லை. கல்யாணங்கள் இன்றைய நிலையில் இன்பம் வளர்க்க உதவுவதில்லை. கடன் சுமை, வறுமைப்பாரம். வீண் கவலைகள், வேண்டாத பிள்ளைகளைத் தான் வளர்க்க உதவுகின்றன. விளைவு என்ன? யுத்தங்களினால் பாதிக்கப்பட்டுள்ள மக்களின் வாழ்க்கைத் தரம் படுமோசமாய், பாதாளத்தை நோக்கிச் சரிந்து கொண்டே போகிறது.

நாட்டு மக்களின் வாழ்க்கை நாசப் பாதையிலே நலிவுறும்போது, நாட்டின் பண்பாட்டை, நாகரீகத்தை உயர்த்திவிடுவோம் என்று சிலர் திட்டங்கள் எதுவுமிடாமலே வெறும் பேச்சுப் பேசுவது பேதமை யில்லையா!

வறுமையில் உழல்வோர், விவசாயத்தை பிழைப்பாகக் கொண்டவர்கள், அரசாங்க உத்தியோகம் கிடைக்காதவர்கள், இவர்களைப்போன்றோர் சோம்பலை வளர்ப்பது போக, சோம்பேறித் தனத்தை கலையாகவும், தொழிலாகவும், மதிப்புக்குரிய பண்பாகவும் போற்றி வளர்க்கிறவர்கள் எண்ணற்றோர் சமுதாயத்தில் அதிகமாகி வருகிறார்கள். இவர்கள் இந்தப் பண்பை விட்டொழிக்க வேண்டும்.

சோம்பலுக்கு உதை கொடுத்து ஓட்டும்படி எல்லோரும் தூண்டப் படுதல் அவசியம். பண்பை மாற்றிக் கொள்ள மறுக்கிறவர்களுக்கு உதை கொடுக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டாலும் ஏற்படலாம்!

ஏனெனில், சோம்பல் மக்களின் வாழ்வில் அத்தழு மாக ஒன்றியுள்ளது. சோம்பேறிகளாய் வாழவே பலரும் விரும்புகிறார்கள். 'முதலாளி மகன் முதலாளி' முதல், சும்மா சுற்றிவரும் 'ஜாலி பிரதர்' வரை எத்தனையோ ரகங்கள். கலைஞன், எழுத்தாளன், நடிகன், பிரசங்கி, அரசியல்வாதி என்று ஏதாவது ஒரு பெயரை வைத்துக் கொண்டு, உழையாமலே உல்லாசமாய் வாழ்ந்து திரிகிற வர்கள் சோம்பேறித் தனத்துக்கு கௌரவப் போர்வை போர்த்த முயல்கிறார்கள். வேறில்லை!

சோம்பேறித்தனம் குற்றங்களில் எல்லாம் பெரிய குற்றம் என்று விதி நிர்ணயிக்க வேண்டும். பொய் கௌரவத்துக்கும், போலிப் பகட்டுகளுக்கும் கல்தா கொடுத்தாக வேண்டும். ஒவ்வொருவரும் மனித சமுதாயத்துக்குப் பயனாகும்படியான தொழிலைக் கட்டா யம் செய்தாக வேண்டும். கலை, இலக்கியம், அரசியல் முதலிய துறைகளில் ஈடுபட்டாலும் கூட, தங்கள் காலத் தின் ஒரு பகுதியை உபயோகமுள்ள தொழில் புரிவதற்கும் ஒதுக்கவேண்டும்.

இன்றைய நிலையில்—நாட்டு நிலை, மக்களின் வாழ்க் கைத் தரம் முதலியவைகளை நோக்குமிடத்து — நாடகம், சினிமா, இலக்கியம், அரசியல், சமுதாய சேவை என்ப தெல்லாம் வெறும் ஹம்பக் தான் என்று சொல்ல நேரிடு கிறது. இவற்றின் போர்வையால் விளையும் வீணத்தனங் கள்—செய்யப்படும் வெறியாட்டங்கள்—கணக்கில.

வெறியாட்டங்களும் வீணத் தனங்களும் — அவை எப்பெயரில் வளரினும் சரியே—அகற்றப்பட வேண்டும்.

அவற்றை வளர்ப்பவர்கள் சொல்லிலும் செயலிலும் மாற்றம் அடைதல் நன்று. மாற விரும்பவில்லையெனில், காலமும், புதுயுக இளைஞர்களும் அவர்களுக்கு சரியான பாடம் கற்பிக்கத் தவறார்கள்.

“ இளைஞர்காள்!
துடிப்பும், செயல் திறமும், மனித மாண்பும், நட்பும் நிறைந்து முன்னேறும் உங்களை நான் காண்கிறேன்.

முதியோர் தேங்கி நின்றனரோ!
வாடித் தளர்ந்து தயங்கினரோ?
காலக் கடலின் கரையோரம்
களைத்துக் கால் கடுத்து நின்றாரோ!
அழியாப் பணியை நாம் ஏற்போம்.
பொறுப்பை, அறிவை நாம் ஏற்போம்.

சென்றது, பின் நிறுத்திடுவோம்.
புதிய, வலிய, தனியுலகம் அமைத்திடுவோம்.
புத்துணர்வோடு, புது வலிவோடு
உலகை — தொழில் உலகை —
நாம் பற்றிடுவோம். முன்னேறுவோம்.

பின் வந்துமொய்த்திடும் கும்பலாலே
நாம் சிறிதும் தளரவோ தாழ்ந்திடவோவேண்டாம்.
முன்னேறுக!
சமரிடை, தோல்வி நடுவிலே,
நில்லாது முன் செல்க!
சாவு வந்து எதிர்ப்படினும்
நின்றிடாமல் முன்னேறுகவே!”

—விட்மன்

## 4. கொடு கல்தா!

"அமைதியற்றவன் நான்.
மற்றவர்களையும் அவ்விதமே ஆக்குகிறேன்
என்பதை நானறிவேன்.
அபாயம் நிறைந்த, சாவு படிந்த கருவிகள்
என் சொற்கள் என்பதை நானறிவேன்.

ஏன்?

அர்த்தமற்ற நம்பிக்கைகளை,
சம்பிரதாயம் என்று தடித்துப் போன அபத்தக் கட்டுப்பாடுகளை
நான் எதிர்க்கிறேன்."

—வால்ட் விட்மன்

★

அறியாமைதான் இன்றையச் சிறுமைகள், இழிநிலைகள் அனைத்துக்கும் காரணம். ஆகவே, அறியாமையை அகற்ற முயலுங்கள், முதலில்.

அறியாமையை வளர்க்கிற பண்புகளுக்கு சீட்டுக் கொடுத்து விடுங்கள். அந்தகாரத்தைப் பரப்புகிற பண்புகளின் அந்தஸ்து எவ்வளவு உயர்ந்ததாக இருப்பினும் கவலையில்லை. அவற்றை உதைத்துத் தள்ளுங்கள்!

சிறுமைகள், சூழ்ச்சிகள், போட்டி, பொறாமைகள் அனைத்தையும் அகற்றி உழையுங்கள். மனிதரிடையே பேதங்கள் வளர்க்கின்ற பாகுபாடுகள் எதாயினும் சரியே, அவற்றை வெட்டித் தள்ளுங்கள்.

மனிதனை மனிதனாக வாழவிடாத செயல்களை, அச் செயல்களை பூஜிப்போரை, விரட்டியடியுங்கள். எல்லோரும் மனிதர்களே. அனைவருக்கும் வாழ வசதி வேண்டும். வாழ்க்கை வசதிகளை தேடிக்கொள்வதற்கு எல்லோருக்கும் சந்தர்ப்பம் அளிக்கவேண்டும். அதற்கு ஆவன செய்யக் கூடியவர்கள் ஆள்வோர்களாகட்டும்; வழிகாட்டிகளாக வரட்டும்; தலைவர்களாகட்டும்.

அதில்லாமல் சுயநலத்துக்காக மக்களின் நலனை பலியிடத் தயங்காதவர்களை அவர்களிருக்கும் போலி பீடத்திலிருந்து இழுத்துத்தள்ளுங்கள். அதிகார ஆசையும், பதவிப் பித்தும் கொண்ட — எதையும் சாதிக்கத் திராணி யற்றுப்போகிற — பெரிய மனிதர்களை (அவர்கள் ஆரம்பத்தில் நல்லன செய்திருந்தாலும், இப்போது உருப்படியாகச் செயலாற்ற இயலாதவர்களாகிவிடில்) மூலையில் உட்காரும்படி செய்யுங்கள்.

புதுமைக்கு, புதுயுக அமைப்புக்கு ஆர்வமாகப் பாடு படுகிற — உழைக்க விரும்புகிற, உழைக்கத் தயாராக இருக்கிற — திறமைசாலிகளுக்கு, இளைஞர்களுக்கு சகல துறைகளிலும் இடமளிக்க முன்வரட்டும் மக்கள். சந்தர்ப்பம் அளிக்கத் தடையாக இருப்பவர்களுக்கு கல் தா கொடுங்கள்!

பொருளாதார பேதங்களுக்குச் சமாதி கட்டவேண்டும். பொருள் பலத்தைத் துணைகொண்டு — திறமையில்லாவிட்டாலும் — அட்டகாசம் புரியத்துணிகிறவர்களை ஒதுக்கிவிடுங்கள். அவர்களது அயோக்கியத்தனத்துக்கு கல்தா கொடுங்கள்!

மக்கள் அறிவற்றவர்களாகவே வாழவேண்டும் என விரும்புகிற வீணர்களுக்குச் சரியான பாடம் கற்பியுங்கள்! எங்கும் அறிவொளி பரப்ப முயற்சி செய்யுங்கள்!

மனிதரை மடையர்களாக்கும் மதக்கட்டுப்பாடுகளுக்கு, வெறியர்களாக்கும் விழா, பூஜை முதலியவைகளுக்கு, அறிவற்றவர்களாக்கும் அர்த்தமற்ற சம்பிரதாயச் சடங்குகளுக்கு சாவுமணி அடியுங்கள்!

சோம்பலுக்கு கல்தா கொடுங்கள்! சோம்பலை கௌரவிக்கும் பொய் பகட்டுகளை விரட்டி அடியுங்கள்!

பொய்மையை, போலித்தனத்தை, வஞ்சகத்தை, சூழ்ச்சியை, சிறுமைகளைக் குழிதோண்டிப் புதையுங்கள்! அன்பை, ஆர்வத்தை, உழைப்பை, உற்சாகத்தை போற்றி வளருங்கள். வளர்க்க உதவுங்கள்.

ஒவ்வொருவரும் உழைக்க வேண்டும். தனது தேவைகளை கூடிய வரையில் தானே பூர்த்தி செய்து கொள்ளவேண்டும். தனது தேவைகளுக்காக, தானே உழைப்பது கேவலம் என்று சொல்கிறவர்களின் மண்டையில் அடித்து உண்மையை உணரச்செய்க!

உழையாமலே வாழ்வதற்கு சகாயம் புரிய சுலபமான வழிகள் — எத்து வியாபாரம் — கண்டு பிடிப்போரைத் திருத்தியாகவேண்டும்.

சிறுவர் சிறுமிகளை ஆரம்பத்திலிருந்தே நல்ல முறையில் வளர்க்க வசதிகள் செய்யவேண்டும்.

பிச்சை எடுப்பதையே கௌரவமான தொழிலாகக் கொண்டு விடுகிற தடிராமன்களை ஆதரிக்காதீர்கள். புது உலகத்திலே பிச்சை எடுக்கும் தொழிலுக்கு கல் தா கொடுக்கவேண்டும்.

பொருளாதார சமத்துவமற்ற நாட்டிலே, தனியொரு சிலரை குட்டி முதலாளியாக மாற்றுவதற்கே பயன்படுகிற 'நிதி' கொடுக்கும் பண்புக்கு கல்தா கொடுங்கள்!

விதி, கடவுள் சித்தம் என்பன போன்ற வார்த்தைகளைச் சொல்லி ஊரை ஏமாற்றுகிற கயமைத்தனத்துக்கு கல்தா கொடுங்கள்.

இன்று நிலவுகிற கலை, சினிமா முதலியன மக்களின் காலத்தைக் கரியாக்குவதோடு, சமுதாயத்தின் மனப்பண்பையே பாழ்படுத்துகின்றன. திறமையற்றவர்களும், பணமூட்டைகளும், அவர்களது அடிவருடிகளும் அந்தந்த துறைகளிலிருந்து வெளியேற்றப்பட வேண்டும்.

புராணங்களும், கடவுளர் பெருமை பற்றி அளக்கும் கதைப்புகளும் சமுதாயத்தின் கருத்தை வளர்த்து, வாழ்வை அமைப்பதில் பங்குகொண்டது போதும். இனியும் அவை மக்களின் மனதை கெடுக்க வேண்டாம். இனி அவை காட்சிசாலைகளில் மூலை அலமாரியிலே வைத்து அடைக்கப்படத்தான் லாயக்கு. சினிமா, நாடகம், இலக்கியம், கல்வி நூல் முதலியவைகளிலிருந்து அவற்றை அகற்றி விடுங்கள்.

பொதுவாக, சிறுமைகள் அனைத்துக்கும் கல் தா கொடுத்து அனுப்புங்கள். கபாடபுரத்தை உண்ட கடலிலே இவையும் விழுந்து தொலையட்டும்!

புதிய சமுதாயம் அமைக்க உண்மையோடு உழைப்பவர்கள், நேர்மையைப் போற்றுகிறவர்கள், சிறு உழைப்பைக் கூட கேவலமாகக் கருதாதவர்கள் முன் வரட்டும் நாட்டுக்கு நல்லன செய்யட்டும்!

★

"இன்றைய உண்மையை உயர்வை இசைக்க!
அன்றாட வாழ்வின், தொழிலின் சிறப்பை மக்களுக்கு உணர்த்துக!
ஒவ்வொருவரும் கைத்தொழில், உழவு, நடவு, தோண்டுதல், மரம் செடி பழவகை காய்கறி பூவகை பலவும் வளர்த்துக் காத்தல் அவசியம்;
ஒவ்வொரு ஆணும், பெண்ணும் ஏதேனும் ஒரு தொழில் புரிதல் அவசியம் எனச் சாற்றுக!
சுத்தி, ரம்பம், கொத்து வேலைகள், சாயம் பூசுதல். தையல் அலுவல், மருத்துவம், சுமை தூக்குதல் சலவை, சமையல், சுத்தம் செய்தல் இவற்றை எளிதாக்க ஏதேனும் அற்புத ஆராய்ச்சி காணல்.
இவற்றில் முனைவதில் கேவலம் எதுவுமே இல்லை என்று உணரச் செய்க!
இவ்விதமான மிக உயர்ந்த பண்புகளைப் பற்றி கவிகளும் கலைஞர்களும் பேசட்டும் என்று நான் நாவலிக்கிறேன்."

—விட்மன்

★

# 5. எதிர்காலத்திலே!

" இறந்த காலத்தைப் போற்றுவோர் எண்ணிலர்;
நிகழ் காலமே! நான் உன்னைப் போற்றுகிறேன்.
வருங்கால நாட்களே, உன்னில் எனக்கு நம்பிக்கை
உண்டு.
உறுதியாய் விஞ்ஞான ரீதியாய் திட்டமிட்டு வேலை
செய்வோர்.
நிகழ் காலத்திடம் நட்புக்கொண்டு, நலம் மிகு எதிர்
காலம் நோக்கிச் செல்ல முடியும், "

—வால்ட் விட்மன்

★

நம் நாட்டில் இன்றைய நிலை பயங்கரமானதாகத் தான் இருக்கிறது. யுத்தகாலத்தில் அனுபவித்தது பெரிதல்ல. இப்பொழுதுதான் நாட்டு மக்கள் கஷ்டங்களை உணரத் தொடங்கியுள்ளனர். யுத்த காலத்தில் மக்களுக்கு உற்சாகம் தந்த பணப்பெருக்கம் ஒடுங்கிவிடவே, திடீரென்று ஏற்பட்டது போலிருக்கிறது தற்சமயம் நிலவுகிற பொருளாதார மாந்தம். எங்கு பார்த்தாலும், எத் துறைகளிலும், வரட்சியே காணப்படுகிறது. 'பிஸினஸ் டல்' — இதுதான் எங்கும் காதில் விழுகிறது. சாதாரணமாக பணம் ஓடிப்புரளுகிற 'பிஸினஸ்களில்' கூட பணம் 'தண்ணீர் பட்ட பாடு பட்ட' நிலைமாறி, 'ரொம்ப டிரை' என்ற நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

பணப்புழக்கம் குறையவே வேலையிலிருக்கும் ஆட்கள் வீட்டுக்கு அனுப்பும் திருப்பணி அதிகரிக்கிறது. வேலையில்லாமல் இருப்பவர்களோடு இவர்களும் சேர்ந்து வேலையில்லாத் திண்டாட்டத்தை அதிகப்படுத்த வேண்டிய அவசியம் விளைகிறது.

சகல கோணங்களிலும், நாடு நெருக்கடியான கட்டத்தை அடைந்திருக்கிறது. நாட்டு நெருக்கடியை நீக்கி மக்களுக்கு நன்மைகள் புரியக்கூடிய திட்டங்களை ஆளவந்தார்கள் செய்ய வேண்டும்.

பொதுவாக, நாட்டுக்கு நிரந்தர நலங்கள் பயக்கும் உயரிய திட்டங்களை நமது நாட்டுக்கு வழிகாட்ட வந்த தலைவர்கள் இதுவரை வகுக்கவில்லை. இன்று நாட்டிலுள்ள எந்தக் கட்சிகளிடத்தும் உயரிய திட்டங்கள் இருப்பதாகத் தெரியவில்லை.

சும்மா 'உற்பத்தியைப் பெருக்குங்கள், உற்பத்தியைப் பெருக்குங்கள்!' என்று முழங்கி வருவதால் பயனில்லை. விவசாயத்தை நம்பி வாழ்ந்த நம் நாடு இனியும் விவசாயமே தனிப் பெரும் கதி என்று நம்பிக்கிடப்பது நல்லதல்ல என்பதைக் காலம் நிரூபித்து வருகிறது. விவசாயத்தோடு பல தொழில் வளர்ச்சிக்கு ஆவன பலவும் செய்ய வேண்டும் சர்க்கார்.

மழை சரியானபடி பெய்யாததாலும், நீர்ப்பாசனங்கள் வளமுற்று வேலைசெய்ய முடியாததனாலும், நல்ல விளைச்சல் கொடுக்கவேண்டிய ஜில்லாக்களில் தொடர்ச்சியாக பஞ்சம் வந்துகொண்டேயிருக்கிறது. நெல் பெருவாரியாக உற்பத்தியாகக் கூடிய தமிழகம் சோற்றுக்கு பிறநாட்டின் தயவை எதிர்பார்த்து நிற்கிறது. பெரிய நகரங்களில் 'ஆளுக்கு இவ்வளவுதான் சோறு' என்கிற அளவு கூட ஒரே நிலையில் நிற்க முடியவில்லை. கூடலாம் குறையலாம் என்று உணவு மந்திரி அடிக்கடி சொல்லி எச்சரிக்க வேண்டிய நிலைமை தான் உள்ளது.

இன்றைய நிலைமையை விமர்சித்த அறிஞர் ஒருவர் விளக்குவது இது :

'நாட்டில் சரியான வளர்ச்சித் திட்டம் எதுவுமில்லா ததனுல், நாட்டுமக்களில் பெரும்பாலோர் எல்லையற்று விவ சாயத்தில் ஈடுபட நேர்ந்திருக்கிறது. விவசாயத்தையே நம்பி வாழ்கிறவர்கள். மொத்த ஜனத்தொகையில் அறு பத்தேழிலிருந்து எழுபது சதவிகிதம் வரை இருக்கிறுர்கள். நாகரீக வளர்ச்சி பெற்றுவிட்ட இதர நாடுகளில், விவசா யத்தை நம்பிப்பிழைப்பவர்களின் தொகையைக் குறைத்து, வேறு லாபகரமான தொழில்களில் ஈடுபடச் செய்ததன் மூலமே முன்னேற்றம் கண்டிருக்கிறுர்கள்.

பல நாடுகளிலும் விவசாயம் மூலம் கிடைக்கும் வருஷ வருமானம் பற்றிய புள்ளி விவரம் இது. (பத்து வருஷங்களுக்கு முந்திய கணக்கு )

| | | | |
|---|---|---|---|
| கனடா | .... | ரூ. | 1,038 |
| அமெரிக்க ஐக்கிய நாடுகள் (U.S.A.) | | ரூ. | 1,400 |
| பிரிட்டன் | .... | ரூ. | 980 |
| இந்தியா | .... | ரூ. | 65. |

விவசாய நிலை இவ்விதம் இருக்கும் போது நாட்டின ரில் பெரும்பாலோர் விவசாயத்தை நம்பி மானம் பார்த்து வாழ்வதால் என்ன பலன் ?

சர்வகலாசாலையில் பட்டம் பெற்றவர்களின் கூட் டத்திலே அறிஞர் ஒருவர் செய்த பிரசங்கத்தின் பகுதி இது. மக்களின் சிந்தனைக்கும் தலைவர்களின் கவனத்துக் கும் சமர்ப்பிக்கப்பட வேண்டியதாகும்:

‘ஒளி புகட்டப்படுவதற்காகக் காத்திருக்கும் அறிவுச் சக்தி நாட்டிலே அதிகமுண்டு; திறமையும் மேதை மெருகும் சேர்ப்பதற்கு அருகதையுள்ள உழைப்புச்சக்தியும் அதிகமிருக்கிறது. திட்டம், கொள்கை, உறுதி யின்மையால் பயனுள்ள செயல்முறைகளும், எண்ணங்களும் கையாளப்பெருமலே வீணுகின்றன. ஜனத்தொகையில் பெருவாரியானவர்கள் வாழையடி வாழையாக வந்த பத்தாம்பசலி முறைகள், பிற்போக்குத்தனமான பண்புகளிலுமே இன்னும் ஒட்டிக்கொண்டு சிரமப்படுகிருர்கள். இன்றைய நாட்டு நிலை சீருற, சிறந்த பயனுள்ள தொழில் திட்டங்களுக்குத் தேவையான செயல் முறைகளுக்கு அடிகோலாவிடில், மிகுந்த பயங்கரமான ஆபத்துகளை நாமே வலிய வரவேற்பதாகும். திறமையுள்ள இளைஞர்கள் பயனுள்ள தொழிலில் ஈடுபட்டு, தொழில் வளர்ச்சியை தங்கள் லட்சியமாகக் கருதி உழைக்க வேண்டும். சோம்பேறித்தனத்தை பெரிய குற்றமாக பாவிக்க வேண்டும்' நாட்டின் பொருளாதார நிலையை பலத்த அஸ்திவாரத்தின் மீது உறுதிப்படுத்துவதற்கு, மக்களின் ஓயாத உழைப்பைத் தவிர வேறு மாற்று எதுவுமில்லை............

‘வளம் மிகுந்த வாழ்க்கையை ஸ்தாபித்துள்ளது அமெரிக்கா. அதற்குக் காரணம் என்ன? நாட்டின் கல்வி முறை, சமுதாய அமைப்பு முறைகளில் அமெரிக்கா போற்றற்குரிய சில பண்புகளைப் பாதுகாத்து வளர்க்கிறது. அவையாவன — திறமை, தொழிலாக்கம், சந்தர்ப்ப சமத்துவம், உழைப்பு ஆகியவை. அமெரிக்க நாட்டினர் வெற்றியையே விரும்புகிருர்கள் என்பது நன்கு தெரிந்த விஷயம். வெற்றி பெறுகிறவர்களிடம் அசூயையோ, பொருமையோ கொள்வதில்லை மற்றவர்கள். எல்லோருக்கும் உழைத்துப் பலன்பெற சம சந்தர்ப்பங்கள்

கொடுக்க வேண்டும் என்பது பொதுவிதி. இந்தியாவிலும் நல்ல பண்புகள் வளரும் புதிய சமுதாயம் அமைக்கப்பட வேண்டியது அவசியம். உழைக்கும் திறமையும், சக்தியும், ஆர்வமும் உள்ள ஆண் பெண்கள் அனைவருக்கும் உழைக்கச் சந்தர்ப்பமும் இடமும் வசதியும் (சர்க்காரின் சேவை வாயிலாகவோ, அல்லது நாட்டு நிர்மாணப்பணிகள் வேறு எவற்றின் மூலமோ) கிடைக்க வகைசெய்ய வேண்டும். அவ்விதம் நாட்டுக்கு நலம் செய்ய விரும்புகிறவர்கள் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்கள், எத்தகைய கொள்கை உடையவர்கள் என்று கவனிக்கக் கூடாது.

'அமெரிக்கன் சிறப்பாக வாழமுடிகிறது. இந்தியனின் வாழ்க்கை வறண்டு வருகிறது. காரணம் என்ன? சமீபத்தில் இந்திய சர்க்காரின் நிதி மந்திரி காட்டிய கணக்குப்படி, 1945—46ம் வருஷத்தில் துண்டாடப்படாத இந்தியாவில் ஒருமனிதனின் சராசரி வருஷ வருமானம் ரூ. 198 இதர நாடுகளில் ஒருவனின் சாராசரி வருஷ வருமானம்— ஆஸ்திரேலியா, ரூ. 1,799.... கனடா ரூ. 2,868. பிரிட்டனில் ரூ. 2,355. அமெரிக்காவில் ரூ. 4,668. இதற்கெல்லாம் காரணம் இந்தியாவில் உள்ள நாம் உழைப்பில் செலவிடும் காலம் மிகமிகக் குறைவு; கையாளும் முறைகளோ மிக மிக ஒழுங்கற்றவை. இவை போக, நாட்டின் பெரும் பகுதியினர் கல்வியறிவற்றவர்கள்.

'அதிக உழைப்பு ஆரோக்கியத்துக்குக் கேடு எனும் தவறான அபிப்பிராயம் நிலவுகிறது. அதிகப்படியாக உழைத்தும் கூட, அமெரிக்கன் இந்தியனைவிட இருபங்கு அதிகமான வயசுகாலம் வரை வாழ முடிகிறது. மேலும், அவன் வாரத்தில் ஐந்து தினங்கள் தான் உழைக்கிறான். இன்றைய மனிதனை உய்விக்கக் கூடியது உழைப்பு தான்

என்பதற்கு இதைத் தவிர வேறு என்ன உதாரணம் வேண்டும்? அதிக உழைப்பு இல்லாமல், பழக்க வழக்கங்களில் திட்டமான வரையறைகள் இல்லாமல் வெற்றி பெற முயல்வது பலன் தராது. வேலை செய்யும் பழக்கங்கள் வேலை நேரம், உழைப்பில் காட்டும் சிரத்தை – அனைத்திலும் சீர்திருத்தம் தேவை.

'இந் நான்கு விதிகளும் கவனத்துக்கு உரியவை: (1) மொத்தத்தில் நாட்டு மக்களின் உழைப்பு நேரம் மிகக் குறைவாகவும், திட்டமான அமைப்பு முறையற்றும் உள்ளது. உழைப்பு நேரம் அதிகமாக்கப் பெற்று, திட்டமான கட்டுப்பாடுகளுக்குள்ளாக வேண்டும். (2) வாழ்வின் ஒவ்வொரு துறையிலும் ஒற்றுமை, சமத்துவம், கூட்டுறவு ஆகியவற்றை வளர்க்க ஒவ்வொருவரும் பாடுபட வேண்டும். (3) உழைப்பிலே உண்மை, ஒழுக்கம், நிறைவு காட்ட ஒவ்வொருவரும் கற்றுக்கொள்ள வேண்டும். (4) அன்றாட வாழ்விலே சகோதர மனிதர்களிடம் அன்பும் ஆதரவும் காட்ட வேண்டும். முன்னேற விரும்புகிறவர்கள் பின்கண்ட விதிகளையும் நினைவில் நிறுத்துவது நல்லது. 'பேங்கிங் ஹவுஸ் ஆவ்ராத்ஸ்சைல்ட்' எனும் பெரிய பிரபல ஸ்தாபனத்தின் தந்தை விட்டுச்சென்ற சொத்திலே கண்டெடுக்கப்பட்டவை இவை: துன்பத்தை பொறுமையுடன் சகித்துக்கொள்க; வாழ்க்கைப் போராட்டத்தில் தைரியமாக இருங்கள்; உங்கள் வாழ்க்கையின் நேர்மையை, உண்மையை புனிதக் கொள்கைகளாகப் போற்றுக; உங்கள் காலத்தை நன்கு பயன்படுத்துக; அதிர்ஷ்டத்தில் நம்பிக்கை வைத்து எதிர்நோக்கியிருக்க வேண்டாம். உண்மையாக உழைத்துப் பாடுபடுங்கள்.'

நாட்டிலே நிலவுகிற அறியாமைக்கு கல்தா கொடுக்க வேண்டியதுதான் ஆளவந்தோரின் முதல்வேலை; நாட்டுக்கு வழிகாட்டத் துணிகிறவர்களின் முக்கியப் பொறுப்பு என்று மீண்டும் குறிப்பிடுகிறேன்.

தமிழ் நாட்டினருக்கு தங்கள் தாய் மொழியில் தம் பெயரைக் கூட எழுதத் தெரியாத நிலை இன்னும் நீடிப்பது இழிவு இல்லையா? இதை ஒழிக்க சர்க்காரும், தனிப்பட்ட கட்சிகளும் ஏன் தகுந்த திட்டங்களிட்டுச் செயல் புரியக் கூடாது?

நாட்டிலே தாய்மொழியே சரியாகப் பரவாத போது, எல்லோருக்கும் கல்வி அறிவு புகட்டத் திட்டங்களிடாத போது, இந்தி போன்ற அயல் மொழிகளைக் கற்பிக்கத் திட்டமும் அது குறித்துப் போராட்டமும் நடைபெறுவது அழகல்ல.

நாட்டிலே நிலவிவரும் பலவிதமான மூடநம்பிக்கைகளுக்கும் சீட்டுக் கிழிக்கப்பட வேண்டுமானல், எல்லோரும் அறிவொளி பெற்ருக வேண்டும். மூட நம்பிக்கைகளை அகற்றப்போதிய துணிவு ஒவ்வொருவரும் பெற்ருக வேண்டும். அநாதிகாலமாக இருந்து வருவது, ஆதிசிவன் பெற்றுவிட்டது, வேதவியாசன் வகுத்துத் தந்தது, அகத்தியன் அடிகோலியது, இவற்றை எப்படி விட முடியும்—நேற்று முளைத்த குழந்தை நீ; உனக்கு என்ன தெரியும்!—என்பனபோன்ற சப்பைக் கட்டுகள் காலத்துக்கும் கருத்துக்கும் பொருந்தா. இத்தகைய பழக்க வழக்கங்களால் கால விரயமும் பொருள் நஷ்டமும்தான் விளைகின்றன என்பதை கவி பாரதியார் அழகாக விளக்கியிருக்கிருர்:

'நம்முடைய மக்களிடையே இருந்துவரும் மூட நம்பிக்கைகளுக்குக் கணக்கு வழக்கே கிடையாது. இதனால் நம்மவர்களின் காரியங்களில் ஏற்படும் தடைகளுக்கும் எல்லையே யில்லை. இந்த மூட பக்திகளிலே மிகவும் தொல்லை யான பகுதி யாதெனில், எல்லாச் செயல்களுக்கும் நாள், நட்சத்திரம், லக்கினம் முதலிய பார்த்தல். க்ஷவரம் செய்து கொள்வதற்குக் கூட நம்மவர் மாதப் பொருத்தம், பட்சப் பொருத்தம், திதிப் பொருத்தம், நாள் பொருத்தம், நட்சத் திரப் பொருத்தம் இத்தனையும் பார்த்தாக வேண்டியிருக் கிறது. க்ஷவரத்திற்குக்கூட இந்தப் பழக்கம் என்றால், இனி கலியாணம், சடங்கு, வியாபாரம், யாத்திரை, விவ சாயத் துவக்கம் முதலிய பல்லாயிரத் துறைகளிலே நம்மவர் மேற்படி பொருத்தம் பார்ப்பதில் செலவிடும் கால விரயத் துக்கும், பொருள் நஷ்டத்திற்கும் அளவே இல்லை.

சகுனம் பார்க்கும் வழக்கமும், செயல்களுக்குப் பெருந்தடையாக இருந்துவருகிறது. இதில் நேரும் அழிவு களை நம்மவர் கவனிப்பதே கிடையாது. சகுனம் பார்ப்ப தனால் காரிய நஷ்டம் மாத்திரமே உண்டாகிறது. நாள் பொருத்தம், லக்கினப் பொருத்தம் முதலியன பார்க்கு மிடத்தே, காரியக் கெடுதல் மட்டுமன்றி, சோதிடர்களுக் காக வேறு பொருள் செலவாகிறது.

காலம் பண விலையுடையது என்பது ஆங்கிலப் பழ மொழி. இது நம்மவருக்குத் தெரிவதில்லை. நேரம் வீணாகுமாயின், அதனால் பண லாபமும் கிடைக்காமல் போகும்.

பி. ஏ., எம். ஏ., பரீட்சைகளில் தேறி, வக்கீல்களாக வும், எஞ்சினீயர்களாகவும், பிற உத்தியோகஸ்தர்களாக

வும் உள்ள கணக்கில்லாதஐயர், ஐயங்கார், பிள்ளை முதலிய வர்களில் எவராவது ஒருவர் தன் வீட்டுக் கலியாணத் துக்கு லக்கினம் பார்க்க வேண்டிய அவசியமில்லை என்று நிறுத்தி யிருப்பாரா? பெண்களின் தொந்தரவால் இவ்வித மான மூடபக்திகளுக்குக் கட்டுப்பட்டு வாழும்படி நேர்ந்து விடுகிறதென்று சிலர் முறையிடுகிறார்கள். பெண் பிள்ளை களுக்கு மரியாதை கொடுக்க வேண்டும். ஆனால், மூடத் தனமான—அறிவாளிகள் கண்டு நகைக்கும்படியான— செய்கைகள் செய்ய வேண்டு மென்று பெண்கள் வற் புறுத்து மிடத்தே அவருடைய சொற்படி நடப்பது முற் றிலும் தவறு.

உண்மையான காரணம் அதுவன்று. பெண்களின் மீது வீண்பழி சுமத்தும் இந்த வீரர்கள் எத்தனையோ செயல்களில் தம் பெண்களை, விலைக்கு வாங்கிய அடிமை கள் போலவும் விலங்குகள் போலவும் நடத்தி வருவது நாம் அறியாததன்று. எனவே, எண்ணில்லாத பொருள் நஷ்டமும், அறிஞரின் நகையாடலும் இல்லாதவாறு துணி வாக உண்மையை உணர்ந்து அதன்படி நடக்கவேண்டும்.'

—(பாரதியார்)

மக்கள் உண்மையை உணர சிந்தனைப் பொன்னொளி எங்கும் பரவ வகைசெய்ய வேண்டும்.

நாகரிகம் என்ற பெயரிலே போலிக் கௌரவத்தை பூஜிக்கிற பண்புக்கு முடிவு கட்டினால் தான் நாடு உருப் படும். இந்தக்குணம் சோம்பேறித் தனத்தையே வளர்க் கிறது. எனது நண்பர் ஒருவர் சொன்னார். 'இப்பொழுது எல்லோரும் சலவைச் சட்டை போட விரும்புகிறார்கள். ஆடைகளை வெளுப்பாக்க முனைகிறவர்கள் குறைந்து

வருகிறார்கள்' என்று. உழையாமலே நலன்களை அநுபவிக்க விரும்புகிறவர்கள் அதிகரிக்கிறார்கள் என்பதைத்தான் இப்படிக் குறிப்பிட்டார்.

இவ்விதம் பகட்டாக வாழத் தவிப்பவர்கள் பட்டணத்திலே குடிபுகுந்து விடுகிறார்கள்.

கால ஓட்டத்திலே பட்டணங்கள் கும்பல் மிகுந்த—குறைவுகள், நலக்கேடுகள் மிகுந்த—இடமாகவும், இதர நகர்ப்புறங்களும் கிராமங்களும் வாழ்வோர் அதிகமில்லாததனால் கவனிப்பற்று, வசதிகள் குறைந்து பாழிடங்கள் போலவும் மாறிவருகின்றன. பணக்காரர்கள் உழைப்பதில்லை. அவர்களைப் போல் வாழ விரும்புகிற மத்தியதரக் குடும்பத்தினரில் உழையாமலே வாழ விரும்புவோர் அதிகரித்து வருகிறார்கள். இவர்களது தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக உழைப்பவர்கள் இரவு பகலென்று பாராமல் அதிகம் உழைத்துச்சாக வேண்டியிருக்கிறது. உழைத்தாலும் இவர்களது வாழ்க்கைத் தேவைக்குத் தக்க வரவு கிடைப்பதில்லை.

முதலாளி வர்க்கத்தினரின், அவர்களைப் போல் போலி வாழ்வு வாழத்துணிகிற மத்தியதரவகுப்பினரின் 'போகாத' பொழுதைப் போக்குவதற் கென்று இன்று திகழ்கிற வீணத்தனங்களினால் நாட்டின் பண்பாடு சீர்கேடடைகிறது என்று முன்னரே குறித்திருக்கிறேன். சங்கீதம், நாட்டியம், சினிமா, பத்திரிகைகள் முதலியன எல்லாமே தனிப்பட்ட சிலரது—அல்லது குறிப்பிட்ட கும்பல்களின்—நன்மைக்கே பயன்படுத்தப் படுகின்றன. இசைக்குயில்களின் கானமும், நாட்டிய ரம்பைகளின் ஆட்டமும் பணம் திரட்டப் பயன்படுத்தப் படுகின்றனவே தவிர, 'எல்லோர்

ரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே யல்லாமல் வேறொன் றறியாப் பராபரத்’ தனத்திலே வளர்க்கப்படவில்லை.

கலைஞர்கள், இசை வல்லுநர்கள், ஆட்டக்காரர்கள், எழுதுவோர், ஓவியக்காரர் இவர்களிலேபெரும்பாலர் செய் கிற பணிகள் எல்லாம் கவைக்குதவாத—அனுவசியமான —ஆடம்பரங்கள் தான், இன்றைய நிலையிலே. இவர்கள் இப்பணிகளைத் தொடர்ந்து நடத்துவது பற்றி நமக்குக் குறை ஏதுமில்லை. ஆனால், தங்கள் காலத்தின் ஒரு பகுதி யையாவது சமுதாய வளர்ச்சிக்கு இன்றியமையாத தொழிலாக்கத்தில் ஈடுபடுத்த வேண்டும்.

வேலையில்லாமல்—வேலை எதுவும் செய்யாமலே— வீணாக ஊர்சுற்றித் திரிகிற வெள்ளைச்சட்டைக்காரர்களை ஏதாவது தொழிலில் ஈடுபடுத்த வேண்டும்.

நகரங்களில் ஜனக்கூட்டம் அதிகரித்து வருவதால், ரோட்டோரங்களிலும், வெட்ட வெளிகளிலும் குடும்பம் நடத்தி அவதியுறும் ‘அன்றாடங்காய்ச்சிகள்’ எவ்வளவோ பேர். இவர்கள் வாழ்க்கையைச் சீருறுத்த வேண்டு மானால் நாட்டின் பல பாகங்களிலும் நானாவிதமான தொழிற்சாலைகளும் ஸ்தாபித்து வேலையிலமர்த்தலாம். இதனால் நாட்டின் தொழிற் பெருக்கத்தையும், அதன் மூலம் பொருளாதாரத்தையும் பலம் பொருந்தியதாகச் செய்யலாம்.

பிச்சை எடுப்பதை குலத் தொழிலாகக் கொண்டிருப் பவர்களையும், அதிகாரப் பிச்சைக்காரர்களையும், உழைக்கத் தெம்பிருந்தும் மனமில்லாமல் பிச்சை எடுப்பதைச் சுலப மான பிழைப்பாகக் கொண்டிருப்பவர்களையும் உதைத் தாவது உழைக்கும்படி செய்யவேண்டும்.

சுகாதார விதிகளைக் காப்பாற்றத் தெரியாமல் கண்ட படி தெருக்களில் துப்பித் திரிவோரை, ரோடு, பிளாட் பாரம் முதலியவற்றை கறைபடுத்துவதோடு வியாதிக் கிருமிகளைப் பரப்புவோரை, கசையடி கொடுத்துத் தான் திருத்த வேண்டும் போலும்! தெருவில் ஆள் வருவதை யும் கவனிக்காமல் 'புளிச்' சென் வெற்றிலை எச்சிலையும், பீடி—சுருட்டுப் பிடித்துச் சுரக்கும் உமிழ் நீரையும், கோழையையும் கண்ணை மூடிக்கொண்டு துப்புவோரைக் கழுவிலேற்ற வேண்டும் என்று ஒருவர் எழுதினார். வேண்டியதில்லை! கசையடி கொடுத்துத் திருத்தலாம்!

நாட்டிலே எண்ணற்றவர்கள் மிராண்டித்தன்மாகவே வாழ்கிறார்கள். வீதியில் நடந்து செல்வது முதல், எங்கு எப்படிப் பழக வேண்டும் என்பது வரை ஆரம்பவிதியிலி ருந்தே இவர்களுக்குக் கற்றுக் கொடுத்தாக வேண்டும் போலும்! இனி வரும் சமுதாயமாவது ஒழுங்காக வளர் வதற்காக, சிறு குழந்தைகளாக இருக்கும் நிலையிலிருந்தே —மேல்நாடுகளில் கற்றுக்கொடுப்பது போல—நாகரிக விதிகளில் பயிற்றுவித்து வளர்க்கவேண்டும். சினிமாக்கள் பிரசுரங்கள், ரேடியோக்கள் மூலம் இன்றுள்ளவர்களைத் திருத்த ஆவன செய்யவேண்டும். இப்படி யெல்லாம் செய்தால்தான் மனிதப்பிராணிகள் மனிதர்களாக வாழ முயல்வார்கள் என்று தெரிகிறது!

வீடற்று, தங்கஇடமற்றுத் திரிகிறவர்களுக்கு இருக்க இடம் செய்து கொடுக்கவேண்டியது அவசியம். இதற்கு கோயில்கள், சர்ச்சுகள் முதலியன நன்கு உதவமுடியும் என முன்பே நான் 'கோயில்களை மூடுங்கள்'! என்னும் புத்தகத்தில் வலியுறுத்தியிருக்கிறேன். வெளவால்கள்

அடையவும் புல் பூண்டுகள் முளைத்துப் பாழடையவும் விடப்பட்டுள்ள பெரிய பெரிய கோயில்கள் எல்லாம் எண்ணற்றவர்களுக்குத் தங்குவதற்கு வசதியும், தொழில் வளர்ச்சிக்கும் ஆலைகளும் கல்விச்சாலைகளும் அமைக்க இடவசதியும் தரமுடியும். இவற்றில் முடங்கிக் கிடக்கிற செல்வத்தை சமுதாய நலனுக்குப் பயன்படுத்த வேண்டும்.

நாட்டிலே வெறும் வெளிகளாக கட்டாந்தரைகளாக, தரிசு நிலங்களாக எவ்வளவோ இடம் காலி கிடக்கிறது. இவற்றில் நிலத்துக்குத் தக்க பயிர்வகைகளோ, மரம் செடி கொடிகளோ வளர்ப்பதற்குரிய ஏற்பாடுகள் செய்யலாம். அதற்கு அவசியமான ஆராய்ச்சிகள் செய்யவேண்டும். மேல் நாடுகளிலே பாலைவனங்களைக்கூட பசுஞ்சோலைகளாக்கி விடுகிறார்கள். கட்டாந்தரைகளை கனி குலுக்கும் விளை நிலங்களாக மாற்றும் திட்டங்கள் கண்டு, கூட்டுப் பண்ணையாக உழைப்பைச் செலுத்தி நாட்டுக்கு நல்லது செய்கிறார்கள். ரஷ்யாவில் ஐந்து வருஷத் திட்டங்கள் மூலம் எவ்வளவு அற்புதங்கள் செய்திருக்கிறார்கள்! இன்னும் செய்கிறார்கள்.

வறண்ட பூமியாய் கிடந்த ஆஸ்திரேலியாவிலே ஆர்ட்டீஷியன் ஊற்றுக்கள் அமைத்து விளைச்சல் நிலமாக எவ்வளவோ இடங்களைத் திருத்தியுள்ளனர்.

வற்றாத ஜீவ நதிகள் ஓடுகிற நம் நாட்டிலோ பஞ்சமும் பட்டினியும்! தண்ணீர் ஓடி ஓடிக் கடலிலே விழுந்து வீணாகிறது. கங்கையை வாய்க்கால் வெட்டிக்கொண்டு வந்து இங்கு வளமாக்க வேண்டும் என்கிற கவிக்கனவு வீண் கனவாகவே இருக்கலாம். ஆனால் வருஷத்தில் பாதி மாதம் வீணாக ஓடுகிற காவேரித் தண்ணீரைப் பயன்படுத்த ஏன் திட்டங்கள் வகுக்கக் கூடாது?

நாட்டிலே இடமிருக்கிறது. உபயோகப் படுத்தாமல் இயற்கை வளங்கள் மல்கிக் கிடக்கின்றன. இவற்றைப் பிரயோசனப்படுத்தும் திட்டங்கள் காணும் திறமையாளர்கள் வேண்டும். திறமையாளர்களுக்கு உதவுகிற செல்வர்கள் வேண்டும். ஆள்வோரின் ஆதரவும் தேவை.

இன்னும் எவ்வளவோ செய்யலாம்.

நான் சொல்பவை எல்லாம் செயலுக்கு உதவாத கனவுகள் என்று இப்போது பலருக்கு தொனிக்கலாம். ஆனல், மேல் நாடுகளிலே, முக்கியமாக ரஷ்யாவிலும் அமெரிக்காவிலும், இவற்றை விட அற்புதங்கள் பல சாதிக்கிறுர்கள். இன்னும் என்னென்ன சாதிக்கலாம் என்று ஆராய்ந்து வருகிறுர்கள். செயற்கை முறையால் மழை பொழியச் செய்கிறுர்கள்; சந்திரனுக்கும் செவ்வாய் கிரகத்துக்கும் தொடர்பு எற்படுத்த அரும்பாடு பட்டு வருகிறுர்கள். இன்னும் அளப்பரிய அசகாய சூரத்தனங்கள் பற்பல புரியத் தயாராக இருக்கிறுர்கள்.

நம் நாட்டினரும் மனிதர்கள் தானே! உலகத்துக்கே போதித்து உய்யும் வழி காட்டிய உத்தமர்கள் வழி வழி வந்தவர்கள் என்று பெருமை பேசிக்கொண்டிருந்தால் போதுமா? மூளைபலம் மிக்கவர்கள் நம் நாட்டினர் என்று வீராப்பு பேசினல் பெருமை வந்துவிடுமா? உலகில் பிற நாடுகள் செயல் திறத்தில் பலமுற்று வருவது போல், நம் நாடும் ஆக்க வேலையில் நன்கு பலமடைய வேண்டும்.

இந்த நிலை எய்துவதற்கு தடையாக இருக்கும் சிறுமைகளை வளர்க்கும் பண்புகளுக்கும் பண்பினருக்கும் கொடுங்கள் கல்தா!

'அனுபவங்களை, எச்சரிக்கைகளை,
சமூகக் கூட்டங்கள், கேலிப் பேச்சுகள்
எதையும் நான் சட்டை செய்ததில்லை.
பெரிது படுத்தப் போவதுமில்லை.
நரகம் என்ற பூச்சாண்டிப் பேச்சு
எனக்குத் துச்சமே யாகும்!
சொர்க்கம் எனும் சொக்குப் பேச்சும்
எனக்கு அற்பமே!
என்னை அவை எதுவும் செய்யா.

அருமைத் தோழா,
என்னுடன் முன்னேறுக என்று
உன்னையும் ஊக்கமூட்டினேன்.
உண்மை.
நமது முடிவின் எல்லை எதுவென உணராவிடினும்,
நம்மது வெற்றியா, அன்றித் தோல்வியும் சாவுமா
என்பது எதுவும் தெரியாவிடினும்,
மேலும் நான் உணர்வூட்டுவேன்!'

—வால்ட் விட்மன்

★

சுவையான ரஷ்யக் காதற் கதை!

# "அன்று இரவில்"

ஆசிரியர்: நிக்கோலை கோகோல்

தமிழாக்கம்: அசோகன்

90 பக்கங்கள் கொண்ட உயர்ந்த பதிப்பு.
விலை ரூபா ஒன்று. தனிப்பிரதி வேண்டுவோர்
ரூ. 1-2-0 மணியார்டர் செய்க.

விற்பனையாளருக்கு ரூ. 25% கழிவு உண்டு.
தபால் செலவு இனும்

**எம். நூரி** 14-A. குப்பையர் தெரு,
ஜி. டி. சென்னை



ஒவ்வொருவரும்
அவசியம் படிக்கவேண்டிய அருமையான புத்தகம்.

# விதவையின் காதல்

சுப. நாராயணன் எழுதியது.

விதவைக்குக் காதலா? என்று கேட்கப்படும் இந்தக் காலத்தில் ஆம்! அது நியாயம் என்று நெஞ்சை நிமிர்த்திப் பதில் சொல்லுகிறது இந்தப்புத்தகம்.

தனிப்பிரதி வேண்டுவோர்
ரூபாய் 1—2—0 மணியார்டர் செய்யவும்.

**விற்பனையாளர் கமிஷன் 25% தபால் செலவு இனும்.**

—: தேவைக்கு எழுதுங்கள் :—

**எரிமலைப் பதிப்பகம்**

**துறையூர், : : திருச்சி Dt.**

சம்பிரதாய மட்டைகள் ஊறும்
குட்டையே மனித சமுதாயம்

மனிதர்களில் பெரும்பாலோர்
புன்மைத் தேரைகள், பொட்டுப் பூச்சிகள் !

இவ்விதம் பழிக்கிறார்கள் பலர்
இந்நிலை நீடிப்பதன் காரணம் என்ன ?

மதம், பல கடவுள் இழிந்த இலக்கியம் மூட நம்பிக்கை
இப்படிப் பல வளர்வதுதான்

இவற்றை மண்ணுக்க வேண்டும்
சமாதி கட்டவேண்டும்
ஏட்டைப் புரட்டி, சீட்டைக் கிழித்து
புதுக் கணக்கு தொடங்க வேண்டும் !

ஏன் ? எப்படி ? — அதற்காகத்தான்


## தில்லை வில்லாளன் எழுதியிருக்கிறார்

# "சாவோலை"

(இரண்டாம் பதிப்பு)

விலை அணா எட்டுதான்
ஏஜண்டுகளுக்கு 25% கமிஷன் உண்டு.
தபால் செலவு இனும்.

—: விவரங்களுக்கு :—

## எரிமலைப் பதிப்பகம்

துறையூர், திருச்சி ஜில்லா.



PRINTED AT THE SRI NATARAJA PRESS, TURAIYUR.

# அருமையான புத்தகம்

விதி, கடவுள், தர்மம் என்பவைகள்
எல்லாம் என்ன என்று ஒரு பாமரன்
உலகினைப் பார்த்து கேட்கிறான்




விலை அணா எட்டுதான்

## எரிமலைப் பதிப்பகம்,

துறையூர் :: திருச்சி மாவட்டம்


WRAPPER PRINTED AT STAR PRESS, TURAIYUR.